[1992 மார்ச் 17

குழுவை அமைத்தார்கள். இன்றையதினம் தமிழகத்தினுடைய காவல் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழ் நாடு வேளாண் பல்கலைக் கழக ஆளுகைக் குழுவில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி அவர்களை நியமித்து இருக்கிறார்கள். எனவே, அவர் பதவிக்காலம் முடியும்வரை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதோடு மட்டுமல்லாது 8 அலுவல் சார்பற்ற உறுப்பினர்களையும் புரட்சித் தலைவி அவர்கள் நியமித்து இருக்கிறார்கள். மாநில விதை துணைக் குழுவில் 4 அலுவல் சார்பற்ற உறுப்பினர்களையும், மாநில ரக வெளியீட்டுக் குழுவில் 4 அலுவல் சார்பற்ற உறுப்பினர்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நியமனம் செய்து விவசாயிகளுடைய நலன்களில் அக்கறை கொண்டு உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 255 திரு. மு. நடேசன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

255—

சேலம் இரண்டாவது தொகுதியில் வீட்டுவசதி குடியிருப்பு கட்டுதல்.

*4833 திரு. மு. நடேசன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் இரண்டாவது தொகுதியில் எத்தனை இடங்களில் வீட்டுவசதி குடியிருப்பு கட்டுவதற்குரிய திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் இரண்டாவது தொகுதியில் 4 இடங்களில் வீட்டுவசதி குடியிருப்புகள் கட்டுவதற்குரிய திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் புதிய பஸ் நிலையம் எதிரிலும், ஐயம்பெருமாள்பட்டியிலும் வீட்டு வசதிக் குடி

யிருப்புகளினுடைய ஆரம்பப் பணிகள் எப்பொழுது துவங்கப் படும், அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு என்று அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் இரண்டாவது தொகுதி யைப் பொறுத்த வரை, அழகாபுரத்தில் 4.3 ஏக்கர் நிலப் பரப் பிலே 108 அடுக்கு மாடி வீடுகள் கட்டும் திட்டமும், ஐயம்பெரு மாள்பட்டியிலே 3.40 ஏக்கர் நிலப்பரப்பில் 72 வீடுகள் கட்டும் திட்டமும் செயல்படுத்தப்படும். மேலும், வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்காக 30 அடுக்கு மாடி வீடுகள் ரூபாய் 6 இலட்சத் தில் கட்டும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. 120 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் ரூபாய் 154 இலட் சத்தில் கட்டும் திட்டத்திற்கு அரசு ஆணை 1357, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, 16—10—1991 தேதி யிட்ட முன்னுரிமைப் பட்டியலில் ஒப்புதல் அளித்து இருக்கின் றது. அதே போல, கந்தம்பட்டியிலே ரூபாய் 60 இலட்சத்தில் மேம்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகளாக 78 காலி மனைகளும், நடுத்தர குடியிருப்புக்காக 38 வீடுகள் கட்டும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது. நான்காவதாக அன்னதானப்பட்டியிலே உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 12 வீடுகளும், மத்திய வருவாய்ப் பிரிவினருக்கு 31 வீடுகளும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 208 வீடுகளும் சுமார் 2 கோடியே 33 இலட்சம் செலவில் கட்டும் திட்டமும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. கூடிய விரை வில் இவைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 256, திரு. அ. தேவராஜ். மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

256—

இலவச காலணித் திட்டம் எடுத்துவிட்டதால் வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு.

*4697 திரு. அ. தேவராஜ்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) செய்யாறு நகரில் இலவச காலணித் திட்டத்தை எடுத்து விட்டதால் வேலைவாய்ப்பு இல்லாமல் போனவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,